டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 2.09.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 063 - Madurai | Online Edition

# வெப்பத்தை மின்சாரமாக மாற்றுவதில் புதிய முறை சாத்தியமாகியுள்ளது


புது தில்லி, செப்.1

இயற்பியல் பாடங்களில் கூறப்பட்டதை விட கிட்டத்தட்ட ஆயிரம் மடங்கு பெரிய மின்னழுத்தமாக, வெப்பநிலை வேறுபாட்டை மாற்றக்கூடிய ஒரு படிக வடிவ குறைக்கடத்தியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உருவாக்கப்படும் வெப்ப மின்னழுத்தமானது, அயனிக் கூழ்மங்களில் மட்டுமே காணப்படும். திட, குறிப்பாக ஒற்றைப் படிகப் பொருட்களில் இது காணப்படுவதில்லை.

இந்தக் கண்டுபிடிப்பு, புதிய அதிஉணர்திறன் வெப்பநிலை உணர்விகள், குவாண்டம் உணர் கருவிகளுக்கான ஒரு பாதையையும் திறக்கிறது. இது வெப்பநிலை உணர்வுக் கருவிகள் முதல், வீணாகும் வெப்பத்தை மின்சாரமாக மாற்றும் வெப்பமின்சார ஜெனரேட்டர்கள் வரையிலான தொழில் நுட்பங்களுக்கு அடிப்படையாக விளங்குகிறது.

அறிவியல், தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான ஜவஹர்லால் நேரு அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் குழு, ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகம், பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து, இதை நிரூபித்துள்ளது.



# பயறு வகைப் பயிர்களில் தன்னிறைவு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



விழுப்புரம், செப்.1

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம் வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தில் பயறு வகைப் பயிர்களில் தன்னிறைவு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி தென்பசியார் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கியராஜ் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகள் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதால் உற்பத்தி ஈட்டுவது மட்டுமல்லாமல் இப்பயிர்கள் மண்ணில் தழைச்சத்தினை வேர் முடிச்சு மூலம் நிலைநிறுத்தி மண் வளத்தை மேம்படுத்துவது குறித்தும், பயறு வகை பயிர்களில் மகசூலை அதிகரித்திட பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் சாகுபடி, வரிசை முறை விதைப்பு, விதை நேர்த்தி செய்தல், சொட்டு நீர் பாசனம் மூலம் பயிர் செய்வது, இலை வழி உரமாக இரண்டு சத டிஏபி கரைசல் தெளிப்பு அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பயிர் ஊக்கி ஆன பல்ஸ் ஒண்டர் தெளிப்பதால் பூ உதிர்வதை தடுத்து காய்கள் நன்றாக பிடித்து மகசூல் அதிகரிக்கும் என்று கூறினார். வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் பண்ணை பதிவு முறைகள் குறித்தும், டிஜிட்டல் பயிர் சாகுபடி கணக்கீடு குறித்தும் விளக்கி கூறினார்.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் திருவரசன் பயறு வகை பயிர்களான உளுந்து, பாசி பயறு, காராமணி சாகுபடி குறித்த தொழில் நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை பற்றி விளக்கி கூறினார். நிகழ்ச்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ் வேளாண்மை உதவி அலுவலர் ரஞ்சனி, ஆத்மா உதவி தொழில்நுட்ப அலுவலர்கள் சந்திரசேகர் மற்றும் அய்யனார் ஆகியோர் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், செப்.1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி 07.09.26 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, 95432 70758, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# நாட்டின் 7.8% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி

## பிரதமர் பாராட்டு

புது தில்லி, செப்.1

பிரதமர் நரேந்திர மோடி, 2026-27-ம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியா எட்டிய 7.8% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை ஒரு மாபெரும் சாதனை என்று கூறியுள்ளார். எண்ணெய் விலை அதிகரிப்பு, விநியோகத் தடைகள், உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் ஆகியவை இருந்த போதிலும், இந்தச் சாதனை இந்திய மக்களின் கூட்டு வலிமையையும் மீட்சித் திறனையும் பிரதிபலிக்கிறது என்று கூறியுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**28. முட்டைக்கோஸ் சூப்**

**தேவையான பொருட்கள்**

முட்டைக்கோஸ் - 2 கப்

வெங்காயம் - 1

பூண்டு - 2 பல்

மிளகு தூள் - ½ டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

முட்டைக்கோஸை வேக வைத்து அரைத்து, வதக்கிய வெங்காயம், பூண்டுடன் சேர்த்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



## வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை
## பயிற்சி அட்டவணை செப்டம்பர் – 2026

| வ. எண். | தேதி | பயிற்சியின் தலைப்பு | இடம் |
|---|---|---|---|
| 1. | 08.09.2026 | பசுந்தாள் உரம் சாகுபடியும் மண் வள மேலாண்மையில் அதன் தாக்கமும் | புதுசுக்காம்பட்டி |
| 2. | 09.09.2026 | நுண்கீரைகள் வளர்ப்பு மற்றும் ஆரோக்கிய பயன்கள் (கட்டணப்பயிற்சி) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 3. | 10.09.2026 | தேனீ வளர்ப்பு (கட்டணப்பயிற்சி) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 4. | 10.09.2026 | தக்காளி பயிரில் நாற்றங்கால் மேலாண்மை | திருப்பரங்குன்றம் |
| 5. | 15.09.2026 | நெல்லிக்காய் பானம்(ஸ்குவாஷ்) – மதிப்புக்கூட்டுதல் (கட்டணப்பயிற்சி) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 6. | 16.09.2026 | வேளாண் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் | பாலமேடு |
| 7. | 18.09.2026 | தோட்டக்கலை பயிர்களில் மதிப்புக்கூட்டல் (உறைநிலை உலர்த்தப்பட்ட பழங்கள்) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 8. | 21.09.2026 to 26.09.2026 | தேனீ வளர்ப்பு | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 9. | 22.09.2026 | மண் வளம் மற்றும் உரங்களின் சமச்சீர் பயன்பாடு | பண்ணைக்குடி |
| 10. | 24.09.2026 | காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை | அலங்காநல்லூர் |
| 11. | 25.09.2026 | தீவனப் பயிர் சாகுபடி | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 12. | 29.09.2026 | முக்கியமான பயிர்களில் சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் கனிம உர அளவைக் குறைப்பதற்கான வழிமுறைகள் | பாலமேடு |



# கொடுமுடி வட்டாரத்தில் கரும்பில் சக்கரையின் அளவை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, செப்.1

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மைத் துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கொடுமுடி வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு கரும்பில் சக்கரையின் அளவை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி (Improved Technogies to improve sugar recovery) நடைப்பெற்றது.

இந்த பயிற்சியில் ஈ.ஐ.டி பாரி நிறுவனத்திலிருந்து விஷ்வபாரதி, கரும்பில் உள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் முறைகள் மற்றும் ஈ.ஐ.டி பாரி மூலம் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

ஜெயகுமார், பூச்சியல் துறை வல்லுனர் ஈ.ஐ.டி பாரி, கரும்பு பயிருக்கு வரும் பூச்சி மேலாண்மை பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அதனை கட்டுபடுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமாக கூறினார். இதில் 40க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# வேளாண் மாணவர்களுக்கான யோசனையிலிருந்து தொழில் தொடக்கம் வரை சிறப்பு வழிகாட்டுதல் அமர்வு

திருப்பூர், செப்.1

வேளாண் மாணவர்களிடையே தொழில்முனைவோர் சிந்தனையை வளர்க்கும் நோக்கில், From Idea to Startup : Entrepreneurship and Incubation Opportunities for Agri Students என்ற தலைப்பில் சிறப்பு வழிகாட்டுதல் அமர்வு நடைபெற்றது.



இந்நிகழ்வில், ஒரு தொழில் யோசனையை அடையாளம் காண்பது முதல் அதனை நடைமுறைப்படுத்தி வெற்றிகரமான Startup–ஆக உருவாக்குவது வரையிலான பல்வேறு அம்சங்கள் மாணவர்களுக்கு விளக்கப்பட்டன. குறிப்பாக, தொழில்முனைவோர் வளர்ச்சி, Startup Incubation, Business Model, MVP மற்றும் Pilot Testing, உணவு பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டல், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரம், Product Development, Business Development மற்றும் Market Linkages குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், Hydroponics, Aeroponics, Vertical Farming, Precision Agriculture, AI, IoT மற்றும் Climate Tech போன்ற நவீன தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு வேளாண் துறையில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவது குறித்தும் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

தொழில்முனைவோரின் புதுமையான யோசனைகள் மற்றும் தயாரிப்புகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property Rights – IPR), Patent, Trademark, Copyright மற்றும் Geographical Indication (GI) போன்ற அறிவுசார் சொத்துரிமை முறைகள் குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மாணவர்கள் தங்களுடைய புதுமையான கண்டு பிடிப்புகள் மற்றும் தயாரிப்புகளுக்கு உரிய அறிவுசார் சொத்துரிமையைப் பெறுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

அதேபோல், விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (Farmer Producer Organisations – FPOs) மூலம் விவசாயிகளை ஒருங்கிணைத்து, உற்பத்தி, மதிப்புக்கூட்டல், பதப்படுத்துதல், பிராண்டிங் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை மேம் படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்து வதற்கான வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. FPOs மற்றும் Startup-களுக்கிடையேயான ஒத்துழைப்பு மூலம் புதிய தயாரிப்புகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதும் விளக்கப்பட்டது.

மாணவர்கள் தங்களுடைய புதுமையான யோசனைகளை வெறும் யோசனையாக வைத்திருக்காமல், அவற்றை Prototype, MVP மற்றும் Pilot Testing மூலம் நடைமுறைப்படுத்தி, சந்தைக் கேற்ற தயாரிப்புகளாகவும் நிலையான தொழில்களாகவும் மாற்றுவதற்கான வழிமுறைகள் பகிரப்பட்டன.

இந்த அமர்வு மாணவர்களுடன் கலந்துரையாடல் முறையில் நடைபெற்றதுடன், தொழில் தொடங்குதல், Incubation, IPR, FPOs மற்றும் சந்தை வாய்ப்புகள் தொடர்பான மாணவர்களின் கேள்விகளுக்கும் விளக்கங்கள் வழங்கப்பட்டன.



வேளாண் துறையில் உள்ள சவால்களை புதுமையான தொழில் வாய்ப்புகளாக மாற்றி, Job Seekers என்பதிலிருந்து Job Creators ஆக மாணவர்கள் உருவாக வேண்டும் என்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வு, வேளாண் மாணவர்களிடையே தொழில் முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதோடு, அவர்களின் புதுமையான சிந்தனைகளை Startup–கள், அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் விவசாயிகள் சார்ந்த தொழில் முயற்சிகள் ஆக மாற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் பயனுள்ளதாக அமைந்தது.



# தளி வட்டாரத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டம்




கிருஷ்ணகிரி, செப்.1

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் (31.08.26) அன்று நடைபெற்றது. அது சமயம் வட்டார தொழில்நுட்பக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன், குழுக்கூட்டத்திறகு தலைமை வகித்து வருகை புரிந்த விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களை வரவேற்று குழுக் கூட்டத்தினை தொடங்கி வைத்தார்.

குழுக்கூட்டத்தில் வேளாண்மைத் தொழல்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் செயல்பாடுகள், திட்ட நோக்கம், திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு சென்றடையும் தொழில்நுட்பங்கள் குறித்தும், பயிற்சி, பட்டறிவு பயணம், செயல்விளக்கங்கள் போன்ற திட்டப் பணிகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது.

த.ரேணுகா, வேளாண்மை அலுவலர், வேளாண்மைத் துறையின் மூலம் மேற்கொள்ளும் மானியத் திட்டங்கள் குறித்து வருகை புரிந்த விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர் களுக்கு விரிவாக விளக்கினார்.

குழுக் கூட்டத்தில் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா, அட்மா திட்ட பணிகள் முன்னேற்றம் மற்றும் விவரங்களையும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் வருகை புரிந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து நன்றி கூறினார். குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேசமூர்த்தி, உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா செய்திருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உலக தென்னை தினம் இன்று



ஒவ்வொரு ஆண்டும் செப்.2ந் தேதி நாடெங்கும் உலக தென்னை தினம் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிற வேளையில் ஓட்டை இல்லாத தேங்காய்க்குள் தண்ணீர் எப்படி செல்கிறது என்பதை பற்றி விரிவாக பார்ப்போம்.

**இளநீர் ஒரு அதிசயம்?**

இயற்கையாக எந்த வித கலப்படமும் இன்றி கிடைக்கும் பானங்களுக்கு எப்போதும் மக்களின் தனி மவுசு உண்டு. அதிலும் இளநீர் (TENDER COCONUT) என்றால் அனைவருக்குமே பிடிக்கும். ஆனால் எந்த ஓட்டையும் போடாமல், மிகவும் கடினமான ஓட்டுக்குள் எப்படி அவ்வளவு தண்ணீர் செல்கிறது? மழை நீர் உள்ளே புகுந்து விடும் என சிலர் தவறாக நினைக்கலாம். இந்த இளநீர் ரகசியத்தை பார்ப்போம்.

தென்னை மரங்கள் பூமியின் மிக ஆழமான பகுதிக்கு தங்களது வேர்களை வேகமாக செலுத்துகின்றன. அங்குள்ள நிலத்தடி நீர் மற்றும் முக்கியமான தாதுக்களையும் (MINER-ALS) உறிஞ்சி எடுத்து மரத்தின் மேல்பகுதிக்கு, அனுப்பு கின்றன. சைலம் (XYLEM) எனப்படும் நுண் குழாய்கள் திசுக்கள் மூலமாக இந்த தண்ணீர் மரத்தின் உச்சிக்கு மேல் நோக்கி பயணிக்கிறது.

**எப்படி பயணிக்கிறது?**

புவிஈர்ப்பு விசைக்கு (GRAVITATIONAL FORCE) எதிராக 100 அடி உயரத்தில் நடக்கும் இந்த நீர் போக்குவரத்து செயல்பாடு உண்மையிலேயே இயற்கையின் ஒரு மிகச் சிறந்த தொழில் நுட்பம் ஆகும். இதை தாவரவியலில் ‘காபிலரி ஆக்சன்‘ (CAP-ILLARY ACTION) என்று சொல்லுவார்கள். ஒரு சிறிய மரம் கூட தினமும் பல லிட்டர் தண்ணீரை இப்படி உறிஞ்சும் ஆற்றல் கொண்டது.

## இளநீர் ரகசியம்?

(COCONUT WATER FORMATION) வேர்கள் மூலமாக உறிஞ்சப்படும் சாதாரண நிலத்தடி நீர் அப்படியே நேராக காய்க்குள் செல்வது கிடையாது. அந்த நீர் காய்களுக்குள் சென்றதும் லிக்விட் எண்டோஸ்பெர்ம் (LIQUID ENDOSPERM) எனப்படும் ஒரு சிறப்பு திரவமாக மாறுகிறது. இந்த பயணத்தில் மரத்தில் உள்ள இயற்கையான சர்க்கரை மற்றும் சுத்திகரிக் கப்பட்ட தாதுக்கள் அந்த நீருடன் ஒன்றாக கலக்குகின்றன. இதுவே பின்னாளில் சுவையான இனிப்பான ஒரு இயற்கையான சத்துமிக்க பானமாக இளநீர் முழுமையாக உருவெடுக்கிறது.

கடினமான காய்களுக்குள் இருக்கும் இந்த சுத்தமான தண்ணீர் உண்மையிலே மனிதர் குடிப்பதற்காக இயற்கை உருவாக்கியது கிடையாது. அது தென்னை மரத்தின் புதிய விதை முளைத்து வளர்வதற்கு தேவையான முழு ஆற்றலையும் உணவையும் கொடுப்பதற்காகவே இந்த திரவம் சேமித்து வைக்கப்படுகிறது.

## இளநீர் உள்ள சத்துகள்

இதில் மனிதர்களுக்கு தேவையான பொட்டாசியம் மற்றும் மெக்னிசியம் போன்ற எலெக்ட்ரோலைட்டுகள் அதிக அளவாக உள்ளதால் இது ஒரு மருத்துவ குணமுள்ள இயற்கையான பானமாக உலகெங்கும் பயன்படுகிறது.

இந்த தென்னை தின விழாவில் வீட்டிற்கு இரு தென்னை மர கன்று களை நடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# ஒருங்கிணைந்த பண்ணைய முறை
# ஒரே பண்ணையில் பல்வேறு வருமானங்கள்

மதுரை, செப்.1

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்க ழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவிகள் தாரணி லோகநாதன், தர்ஷினி, கிருஷ்ண பிரியா, கல்கி, அமிர்த கார்த்திகா மற்றும் லாவண்யா ஆகியோர், RAWE



(Rural Agricultural Work Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம் பெரிய இலந்தைகுளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை (Integrated Farming System – IFS) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.




தற்போதைய வேளாண்மையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பு, பருவநிலை மாற்றம், மழைப்பொழிவில் ஏற்படும் நிலையற்ற தன்மை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நீர்ப்பற்றாக்குறை மற்றும் சந்தை விலை ஏற்ற இறக்கம் போன்ற பல்வேறு சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, ஒரே ஒரு பயிரை மட்டுமே சார்ந்திருக்கும் விவசாய முறையில் ஒரு பருவத்தில் ஏற்படும் இழப்பு, விவசாயியின் ஒட்டுமொத்த வருமானத்தையும் பாதிக்கக்கூடும். இத்தகைய சூழலில், ஒருங்கிணைந்த பண்ணைய முறை நிலையான வருமானத்திற்கும் வளங்களின் திறமையான பயன்பாட்டிற்கும் சிறந்த வழிமுறையாக அமைகிறது.

### ஒருங்கிணைந்த பண்ணைய முறை என்றால் என்ன?

ஒரே பண்ணையில் பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேளாண் மற்றும் சார்பு தொழில்களை ஒன்றோடொன்று இணைத்து செயல்படுத்துவதே ஒருங்கிணைந்த பண்ணைய முறை ஆகும். இதன் முக்கிய நோக்கம், பண்ணையில் கிடைக்கும் நிலம், நீர், தொழிலாளர் மற்றும் உயிரியல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதுடன், ஒரு தொழிலில் உருவாகும் கழிவுகளை மற்றொரு தொழிலுக்கான இடுபொருளாக மாற்றுவதாகும். இதன் மூலம் கழிவு என்பது வளம் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### கழிவிலிருந்து வளம்

IFS முறையின் மிக முக்கிய சிறப்பு வளங்களின் மறுசுழற்சி ஆகும். கால்நடைகளிலிருந்து கிடைக்கும் சாணத்தை கம்போஸ்ட்

அல்லது மண்புழு உரம் தயாரிக்கப் பயன்படுத்தலாம். தயாரிக்கப்படும் உரத்தை மீண்டும் பயிர்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் வெளியில் இருந்து வாங்க வேண்டிய உரத்தின் அளவைக் குறைக்க முடியும். அதேபோல், பயிர்க் கழிவுகளில் பொருத்தமானவற்றை கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம். மீதமுள்ள பயிர்க் கழிவுகளை கம்போஸ்ட் தயாரிக்கப் பயன்படுத்தலாம். கோழிக் கழிவுகளையும் முறையாக மேலாண்மை செய்து கரிம உரமாக மாற்ற முடியும். மீன் வளர்ப்பு அமைப்பில் உருவாகும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த நீரை உரிய முறையில் மேலாண்மை செய்து பயிர்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்ய முடியும். இவ்வாறு ஒரு தொழிலில் கிடைக்கும் துணைப் பொருட்கள் மற்றொரு தொழிலின் தேவையைப் பூர்த்தி செய்வதால் பண்ணையின் ஒட்டு மொத்த செயல்திறன் அதிகரிக்கிறது.

**பல்வேறு தொழில்கள் பல்வேறு வருமானங்கள்**

ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் முக்கிய நன்மை வருமானத்தைப் பல்வகைப்படுத்துவது ஆகும். பயிர் சாகுபடியுடன் கால்நடை, கோழி, மீன், காய்கறி, முட்டை, பால், தேன் அல்லது காளான் போன்ற தொழில்களை இணைப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் வருமானம் பெறும் வாய்ப்பு உருவாகிறது.

ஒரு பயிரின் விலை குறைந்தாலும் அல்லது எதிர்பாராத இயற்கை காரணங்களால் அந்தப் பயிரில் இழப்பு ஏற்பட்டாலும், மற்ற பண்ணைக் கூறுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ஒட்டுமொத்த பொருளாதார இழப்பை ஓரளவு சமாளிக்க உதவும்.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஏற்றது

IFS முறையை பெரிய நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகள் மட்டுமே செயல்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. சிறு மற்றும் குறு விவசாயிகளும் தங்களுடைய நிலம் மற்றும் நீர் வசதிக்கு ஏற்ப சிறிய அளவில் தொடங்கலாம். உதாரணமாக, பயிர் + கால்நடை, பயிர் + கோழி, பயிர் + மண்புழு உரம் அல்லது பயிர் + மீன் போன்ற எளிய ஒருங்கிணைப்புகளில் தொடங்கி, பின்னர் தங்களது பொருளாதார வசதிக்கு ஏற்ப கூடுதல் கூறுகளை இணைத்துக் கொள்ளலாம்.

## வெற்றிகரமான IFS-க்கு திட்டமிடல் அவசியம்


ஒருங்கிணைந்த பண்ணைய முறையைத் தொடங்குவதற்கு முன், விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலப்பரப்பு, நீர் வசதி, முதலீடு, தொழிலாளர், மண் தன்மை மற்றும் சந்தை வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். உள்ளூர் சூழலுக்கு ஏற்ற பண்ணைக் கூறுகளைத் தேர்வு செய்வது முக்கியம்.

மேலும், ஒரு தொழிலில் உருவாகும் கழிவு அல்லது துணைப் பொருள் மற்றொரு தொழிலுக்கு எவ்வாறு பயன்படும் என்பதை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். சந்தையில் அதிக தேவை உள்ள பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு களையும் ஆராய வேண்டும். தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வேளாண் துறை மற்றும் வேளாண் வல்லுநர்களிடமிருந்து பெறுவது சிறந்தது.

ஒருங்கிணைந்த பண்ணைய முறை என்பது பல்வேறு வேளாண் தொழில்களை ஒரே பண்ணையில் மேற்கொள்வது மட்டுமல்ல; அவற்றை ஒன்றோடொன்று இணைத்து, வளங்களை மறுசுழற்சி செய்து, உற்பத்திச் செலவைக் குறைத்து, பல்வேறு வருமான வாய்ப்புகளை உருவாக்கும் நிலையான வேளாண் அணுகுமுறை ஆகும்.

கழிவை வளமாக்கி, வளத்தை வருமானமாக்குவோம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு IFS முறையைச் செயல்படுத்துவதன் மூலம், விவசாயிகள் தங்களிடம் உள்ள குறைந்த வளங்களை திறமையாகப் பயன்படுத்தி, நிலையான உற்பத்தி மற்றும் தொடர்ச்சியான வருமானத்தை உருவாக்க முடியும். இதன் மூலம் விவசாயம் ஒரு பயிரை மட்டுமே சார்ந்த தொழிலாக இல்லாமல், பயிர், கால்நடை, மீன், கோழி மற்றும் பிற பண்ணைத் தொழில்கள் ஒன்றுக்கொன்று துணைபுரியும் ஒருங்கிணைந்த வாழ்வாதார முறையாக மாற்றமடையும்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தொழில்துறை ஆற்றல் தணிக்கை குறித்த களப்பயணம்

கோயம்புத்தூர், செப்.1

உலகளாவிய தொழில்துறை மின்சாரத்தில் பெரும் பகுதியை நீரேற்று உள்கட்டமைப்பு பயன்படுத்துகிறது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த 43 பி.டெக். ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் அடங்கிய குழு, கோயம்புத்தூரில் உள்ள அக்வாசப் இன்ஜினியரிங் (அக்வா குழுமம்) நிறுவனத்தில் பாய்ம அமைப்புகளின் எதிர்காலம் குறித்து ஆழமாக ஆய்வு செய்தது.



இந்தத் தொழில்முறை அனுபவப் பயணம், IoT சென்சார்கள், உயர்-துல்லியமான அசெம்பிளிக்கான மேம்பட்ட ரோபோட்டிக் கையாளும் கரங்கள் மற்றும் ஸ்மார்ட் ஆட்டோமேன் கட்ட மைப்புகள் உள்ளிட்ட இண்டஸ்ட்ரி 4.0 பயன்பாட்டுக் கருத்துக் களுடன், ஆற்றல் திறன் கொண்ட மோட்டார்கள்/பம்புகளின் நவீன உற்பத்தியை வழங்கியது. த்ராட்டில் வால்வுகள் மூலம் சக்தியை வீணாக்குவதற்குப் பதிலாக, மாறும் நீர் தேவைகளுக்கு ஏற்ப மோட்டார் வேகத்தைச் சரிசெய்வதன் மூலம் வேரியபிள் ஸ்பீட் டிரைவ்கள் (VSD) எவ்வாறு ஆற்றலைச் சேமிக்கின்றன என்பதை மாணவர்கள் கற்றுக்கொண்டனர். துல்லியமான இம்பெல்லர் சமநிலைப்படுத்தல் மற்றும் கேசிங் சீரமைப்பு ஆகியவை எவ்வாறு பாய்வை அதிகரிக்கின்றன, பம்பை சேதப்படுத்தும் குழிவுறுதலைத் தடுக்கின்றன, மற்றும் சிறந்த செயல்திறன் புள்ளியை (BEP) பராமரிக்கின்றன என்பதை அவர்கள் ஆராய்ந்தனர்.

இறுதியாக, மொத்த டைனமிக் ஹெட் (TDH) மற்றும் மீயொலி பாய்வு கண்காணிப்புக்கான நேரடி சோதனையை அக்குழுவினர் கவனித்தனர். இந்திய BIS விதிமுறைகள் மற்றும் BEE 5-நட்சத்திர செயல்திறன் மதிப்பீட்டுத் தரநிலைகளின் கீழ், செயல்திறனை எவ்வாறு தணிக்கை செய்வது என்பதை இந்தக் கண்டறியும் சோதனைகள் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தன.

இந்த நடைமுறை ஆற்றல் தணிக்கை களப்பயணம் மற்றும் நவீன பம்ப் உற்பத்தி ஆலைக்கான வருகை ஆகியவை AEC&RI, TNAU, கோயம்புத்தூரின் பொறியியல் துறை முதன்மையர் முனைவர் பி. ராஜ்குமாரின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தொழில்துறை பயணத்தை ஏற்பாடு செய்வதில் தொடர்ந்து ஆதரவளித்த Aquasub Engineering (Aqua Group) நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு மூத்த மேலாளர் V.A.சுரேஷ்குமாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொது மேலாளர்கள் U.V.ரவி (ASE Unit 4) மற்றும் T.திருமேனி (API&ASE Unit 2) ஆகியோர் இந்தப் பயணத்தை முன்னின்று நடத்திய முக்கிய நபர்களாவர்.

இத்திட்டத்தின் தொழில்நுட்பக் குழுவிற்கு Aquasub Engineering நிறுவனத்தைச் சேர்ந்த ராமபிரசாத் (பயிற்சி மற்றும் சேவை), ஜெகதீஷ் மற்றும் கிருஷ்ண பிரசாத் (ASE Unit 4), நந்தகுமார் (ஆற்றல் தணிக்கையாளர்) மற்றும் நடராஜ் மற்றும் சாஹுல் (வடிவமைப்புத் துறை) ஆகியோர் ஆதரவளித்தனர்.

புதுப்பிக்கத் தக்க ஆற்றல் பொறியியல் துறையின் பேராசிரியர் முனைவர் ஆர்.மகேந்திரன், B.Tech. EEE (2023-ஆம் ஆண்டு பிரிவு) மாணவர்களுடன் சென்று, பம்புகளில் (pumps) ஆற்றல் திறன் மிக்க தொழில்நுட்பங்கள் குறித்த தொழில்முறை நிபுணர்களுடனான கலந்துரையாடல்களை ஒருங்கிணைத்தார்.

இந்த வருகையானது, வகுப்பறையில் கற்ற பாடங்களை நிஜ உலகத் தொழில் நடைமுறைகளுடன் குறிப்பாக ஆற்றல் திறன், ஆற்றல் தணிக்கை, தானியக்கம் மற்றும் மேம்பட்ட உற்பத்தி ஆகிய துறைகளில் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவியது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சமச்சீர் உர மேலாண்மை மற்றும் பயன்பாடு குறித்து விவசாயிகள் பயிற்சி




புதுக்கோட்டை, செப்.1

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் முள்ளிப்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு சமச்சீர் உர மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ரஹ்மத் நிா பேகம் தலைமை வகித்தார். இப்பயிற்சியில் முள்ளிப்பட்டி கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் குமார் கலந்து கொண்டார்.

இப்பயிற்சியில் பாலமுருகன் (வேளாண் விஞ்ஞானி) வேளாண் அறிவியல் மையம், வம்பன், பயிரின் தேவை, மண் பரிசோதனை மற்றும் பருவநிலைக்கு ஏற்ப தேவையான ஊட்டச்சத்துக்களை பயிர்களுக்கு சரியான விகிதத்தில் வழங்குவதே சமச்சீர் உரப் பயன்பாடு எனக் கூறினார். சமச்சீர் உரமிடுதலால் மண்வளம் காக்கப்படும், பயிரின் வளர்ச்சி ஆரோக்கியமாகவும், சிறந்த விளைச்சலையும் தரும் எனவும், தேவையற்ற உரச் செலவைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்கலாம் எனவும், மேலும், நிலத்தடி நீர் மாசுப்படுவதைத் தடுப்பதோடு நச்சு வாயு வெளியேற்றத்தையும் குறைத்து சுற்றுச்சூழலினை பாதுக்காத்து கொள்ள இயலும் எனவும் எடுத்துரைத்தார்.

மேலும், யூரியாவினை மொத்த உர அளவையும் ஒரேடியாகக் கொட்டாமல், பயிரின் வளர்ச்சிக்கேற்ப இரண்டு அல்லது மூன்று தவணைகளாகப் பிரித்துக் கொடுக்கும் போது யூரியா வீணாவது தடுக்கப்பட்டு, பயிருக்குச் சீரான நைட்ரஜன் சத்து கிடைக்கிறது. அதாவது பயிர் நடுவதற்கு முன்பு அல்லது விதைக்கும் போது மொத்த தேவையில் 25 முதல் 50 சதவீதம் வரை அடி உரமாக இடுவதால் ஆரம்பகால வேர் வளர்ச்சிக்கு உதவும், பயிர்நட்ட அல்லது விதைத்த 25 – 30 நாட்களில் பயிர்கள் தூர்விடும் அல்லது கிளைகள் பரப்பும் பருவத்தில் அடுத்த பகுதியை முதல் தவணையாக மேல் உரமாக இட வேண்டும், பயிர் நட்ட 50 முதல் 60 நாட்களில் பயிர் பூக்கும் பருவம் அல்லது கதிர் உருவாகும் தருணத்தில் மீத முள்ள பகுதியை இரண்டாம் தவணையாக மேல் உரமாக இடுவதால்

யூரியா வீணாவதைத் தடுத்து பயிரிக்கு சீரான தழைச்சத்து கிடைக்கும் என விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குநர் பொன்னமராவதி ரஹ்மத் நிா பேகம், உரம் இடுவதற்கு முன் மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்னையை அறிந்து மண் வள அட்டையில் பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட வேண்டும் எனவும், இராசயன உரங்களுடன் தொழுஉரம், மண்புழு உரம், மற்றும் பசுந்தாள் உரங்களை இணைத்து பயன்படுத்த வேண்டும் எனவும், மேலும், இரும்பு, தாமிரம், மாங்கனிசு, துத்தநாகம், போரான் மற்றம் மாலிப்டினம் போன்ற அவசியமான நுண்ணூட்டச்ச சத்துக்களைப் பரிந்துரைக்கப்பட்ட அளவில் இட்டு விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம் எனவும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றம் செயல்பாடுகள் குறித்து எடுத்துக் கூறினார். தற்பொழுது வேளாண் கிடங்கில் உள்ள இருப்புகள், பற்றிய விவரத் தினை விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார். அனைத்து விவசாயிகளையும் தங்களது நில உடைமைகளை பதிவு செய்து தனித்துவ அடையாள எண் பெற வேண்டும் மற்றும் அனைத்து புல எண்களையம் விடுதலின்றி பதிவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்தியபாமா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முறையே பிரசாத், நவீன்குமார் செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# இப்கோ வயல் விழா

தஞ்சாவூர், செப்.1

தஞ்சாவூர் மாவட்டம், மேலஉளூர் கிராமத்தில், முன்னோடி விவசாயி பாஸ்கரின் நெல் வயலில் இப்கோ நானோ உரங்கள் தெளிக்கப்பட்டு, வயல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.





இதில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது, இப்கோ கள அலுவலர் மாரியப்பனால் விவசாயிகளுக்கு இப்கோ நானோ உரங்கள், சாகரிகா, உயிர் உரங்கள் மற்றும் பயோ டிகம்போசர் ஆகியவற்றின் முக்கியத்துவம், பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டம் குறித்தும் விளக்க மளிக்கப்பட்டு, நிலையான வேளாண்மைக்கு மண்வளத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் உயிர் உரமான NPK கன்சார்ட்டியா வழங்கப்பட்டது.



# உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்து விவசாயிகள் பயிற்சி

திருவள்ளூர், செப்.1

உரங்களின் சமச்சீர் பயன்பாடு என்பது பயிரின் தேவைக்கேற்ப தழைச்சத்து (N), மணிச்சத்து (P), சாம்பல்சத்து (K) மற்றும் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், சரியான அளவு மற்றும் சரியான நேரத்தில் பயன்படுத்துவதாகும்.

**உரங்களின் சமச்சீர் பயன்பாட்டின் முக்கியத்துவம்**

**மண் பரிசோதனை**

● பயிரிடுவதற்கு முன் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

● மண்ணில் ஏற்கனவே உள்ள சத்துக்களின் அளவை அறிந்து, அதற்கேற்ப உரமிட வேண்டும்.

**NPK உரங்களை சரியான விகிதத்தில் பயன்படுத்துதல்**

● தழைச்சத்து (N) இலை மற்றும் தண்டு வளர்ச்சிக்கு உதவுகிறது.

● மணிச்சத்து (P) வேர் வளர்ச்சி மற்றும் பூக்கும் திறனை அதிகரிக்கிறது.

● சாம்பல்சத்து (K) பயிரின் வலிமை, நோய் எதிர்ப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துகிறது.

எனவே ஒரு சத்தை மட்டும் அதிகமாகப் பயன்படுத்தாமல், பயிரின் தேவைக்கேற்ப மூன்றையும் சமநிலையாக வழங்க வேண்டும்.

**சரியான அளவு உரமிடுதல்**

● அதிகப்படியான உரம் பயன்படுத்துவது மண் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கலாம்.

● குறைவான உரம் பயன்படுத்தினால் பயிர் வளர்ச்சி மற்றும் மகசூல் குறையலாம்.

எனவே பரிந்துரைக்கப்பட்ட அளவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**சரியான நேரத்தில் உரமிடுதல்**

● பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப உரங்களைப் பிரித்து இடுவது சிறந்தது.

● குறிப்பாக தழைச்சத்து உரங்களை ஒரே முறையில் அதிகமாக இடாமல், தேவைக்கேற்ப பிரித்து இடலாம்.

## இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்



● தொழு உரம், பசுந்தாள் உரம், மண்புழு உரம், கம்போஸ்ட் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணில் கரிமப் பொருளின் அளவை அதிகரிக்கலாம்.

● இது மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனையும் நுண்ணுயிர் செயல் பாட்டையும் மேம்படுத்துகிறது.

## உயிர் உரங்களின் பயன்பாடு

● அசோஸ்பைரில்லம், அசோட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களை பயிருக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம்.

● இவை சத்துக்கள் பயிருக்கு கிடைப்பதை மேம்படுத்த உதவுகின்றன.

## நுண்ணூட்டச் சத்துக்கள்

● துத்தநாகம், இரும்பு, போரான், மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச் சத்துக்களும் பயிருக்கு தேவையான அளவில் வழங்கப்பட வேண்டும்.

● குறைபாடு இருந்தால் மண் பரிசோதனை மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் பயன்படுத்த வேண்டும்.

## சமச்சீர் உரமிடுதலின் நன்மைகள்

● பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்படும்.
● மகசூலும் விளைபொருளின் தரமும் அதிகரிக்கும்.
● உரச் செலவு குறையும்.
● மண் வளம் நீண்ட காலத்திற்கு பாதுகாக்கப்படும்.
● அதிகப்படியான உரப் பயன்பாடு தவிர்க்கப்படும்.
● சுற்றுச்சூழல் மாசுபாடு குறையும்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க உதவும் என்று விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டார தொழில்நுட்ப மேலாளர் மா.செல்வப்ரியா, விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்தும், நம்ம வயல் செயலி மூலம் பயிர் கணக்கெடுப்பு எடுப்பது பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு கூறினார். இப்பயிற்சிக்கு உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அ.அருளானந்தம் மற்றும் சே.சரவணன் ஆகியோர் தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**